**OS No.131/2019**

PW 2 - கஸ்தூரி

நாள் 08.04.2026

**வா.சா. 2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் தற்சமயம் மதுரையில் குடியிருந்து வருகிறேன். 10 வருடங்கலாக மதுரையில் குடியிருந்த வருகிறேன். நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. என்னை வாதி வீராயி அவர்கள் தான் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் வாதி வீராயி சொல்லித்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் அவரது பங்காளி என்பதால் எனக்கு விபரங்கள் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்று கேட்டால் சர்வே எண் 215/17 ஆகும்.

தாவா சொத்திற்கு அருகில் என் மாமனாருக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லக்கூடிய சொத்து என்பது தாவா சொத்திற்கு எந்த பகுதியில் அமைந்துள்ளது என்றால் தென்வடலில் அமைந்துள்ளது.

வழக்கு நிலுவையில் இருக்கும் போது வடிநீர் கழிவுநீர் தொட்டி கட்டியதாக சொல்லியுள்ளதில் தாவா சொத்தில் எந்த பகுதியில் கட்டப்பட்டது, எப்போது கட்டப்பட்டது என்றால் தென்வடலில் கட்டப்பட்டது எப்போது கட்டப்பட்டது என்பது எனக்குத் தெரியாது.

தாவா வழக்கை வாதியானவர் எந்த வருடம் தாக்கல் செய்தார் என்று கேட்டால் அது எனக்குத் தெரியாது. நீங்கள் சொல்வது போல் தாவா சொத்திற்கு அருகில் உங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல, சொத்து உள்ளது.

தாவா சொத்தைப் பற்றிய எந்த விபரமும் உங்களுக்குத் தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

-Sd-
District Munsif,
Manamadurai.